**பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,**

ந.க.எண். 15984/2017/அ6 நாள்: 18 .07.2022

பொருள்: பணியமைப்பு – கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருநெல்வேலி மண்டலம் – திருநெல்வேலி மாவட்டம் – பத்தமடை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து – 16.01.2011–இல் பணியிடை காலமான பாலு (திரு) சு – என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய யோகேஷ் (திரு) பா – என்பவரை கருணை அடிப்படையில் பணகுடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – 05.07.2017 முற்பகல் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் * திருநெல்வேலி-7 * 04 AUG 2022

பார்வை:
1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2637/2011/ப2 நாள் 27.06.2017
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண். 2637/2017/ப2 நாள்.03.11.2017.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.15984/2017/அ9, நாள்.20.12.2017
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.
5. அரசு கடித எண்.28136/பேரூ.1/2017–1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள் 21.06.2022

*******

**ஆணை:**

திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்து 16.01.2011–ல் பணியிடை காலமான திரு.சு.பாலு என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.பா.யோகேஷ் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண். 2637/2011/ப2 நாள்.27.06.2017–ன்படி கருணை அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 05.07.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய வரப்பெற்ற கருத்துருவினை பார்வை 3–ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்வை 5–ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின் படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற

பேரூராட்சிகளின் ஆணையர் நிலையில் இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு.பா.யோகேஷ் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5–ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர்/ பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப் படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.பா.யோகேஷ், இளநிலை உதவியாளர் | பணகுடி பேரூராட்சி | 05.07.2017 மு.ப | 05.07.2017 மு.ப |

மேலும், தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் திருநெல்வேலி மண்டல பேரூராட்களின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது

பேரூராட்சிகளின் ஆணையர்

<u>பெறுநர்</u>

18.7.2022

திரு.பா.யோகேஷ்,
இளநிலை உதவியாளர்,
பணகுடி பேரூராட்சி (தற்போது திருக்குறுங்குடி பேரூராட்சி)
திருநெல்வேலி மாவட்டம்
(திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

<u>நகல்:</u>

1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்
3. செயல் அலுவலர், பணகுடி/திருக்குறுங்குடி பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி-7

ந.க.எண். 2637/2011/ட2 நாள். 04.08.2022

/சார்பு செய்யப்படுகிறது/.

3/4

பெறுநர்.

திரு. பா. யோகேஷ்.
இளநிலை உதவியாளர்
திருக்குறுங்குடி பேரூராட்சி.
திருநெல்வேலி மாவட்டம்.

உதவி இயக்குநர்
(பேரூராட்சிகள்)
திருநெல்வேலி மண்டலம்.